பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 26 திங்கட்கிழமை (09-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 103

# புலிகளின் தாக்குதலைச் சமாளிக்க படை அதிகாரிகளுக்கு மீள் பயிற்சி!

## அதிரடிகளில் சிக்கி சிப்பாய்கள் இரையாவது குறித்து அதிர்ச்சி

கொழும்பு, மார்ச் 9

விடுதலைப் புலிகளின் வீராவேசத் தாக்குதல்கள், போருபாயங்கள் போன்றவற்றிற்கு சிப்பாய்கள் இலகுவில் சிக்கி இரையாவது ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்களுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது.

புலிகளின் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்கும் படையினரின் பிரிழப்புகளைக் குறைப்பதற்குமாக இராணுவத்தின் கனிஷ்ட தலைமைத்துவ அதிகாரிகளுக்கு மீள்பயிற்சி வழங்க இராணுவத் தலைமைப் பீடம் முடிவு செய்துள்ளது.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இராணுவ அதிகாரிகளுக்கு மீள் பயிற்சியளிப்பதற்கான பயிற்சிக் குழுக்களை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன கடந்த வாரம் வடக்கு—கிழக்குக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

கிழக்கில் கடந்த சில மாதங்களில் புலிகளின் அதிரடித் தாக்குதல்களில் சிக்கி பெரும் எண்ணிக்கையான படையினர் உயிரிழந்துள்ளனர். படையினருக்கு போதிய பயிற்சி வழங்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தொழில் நுட்பக் கல்லூரி பரீட்சை 16 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியின் இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் நடைபெறும்.

பரீட்சை ஆணையாளர் இது குறித்து தொழில் நுட்பக் கல்லூரி அதிபருக்கு 28-2-92 ஆம் திகதியிட்ட கடிதம் மூலம் அறிவித்திருக்கிறார்.

1991 ஆம் ஆண்டு இறுதிப் பரீட்சை சுருக்கெழுத்து, தேசியக் கல்விச் சான்றிதழ் ஆகிய பாடத் திட்டங்களுடன் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை பரீட்சைகளை நடத்துவதற்கு முன்னேற்பாடாக அவற்றுக்குரிய காகிதாதிகள், அனுமதி அட்டைகள், பாடநேர அட்டவணைகள் என்பன நேற்று வந்தடைந்த 'லில்லி' கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளன. [அ]

## மட்டக்களப்புப் பகுதியில் 42 தமிழர்கள் கொலை?

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினால் கைது செய்யப்பட்டிருந்த 42 தமிழ் மக்கள் சித்திரவதைக் குட்படுத்தப்பட்டு கொடூரமான முறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக படையினரிடம் சிக்கி அங்கிருந்து தப்பி வந்த மணியம் [42 வயது] என்பவர் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

குடும்பிமலை இராணுவ முகாம் படையினரால் முகாமை அண்டிய பகுதிகளில் வைத்துக் கைது செய்யப்பட்டவர்களே இவ்வாறு கொலையுண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-3]

## கோண்டாவிலில் குண்டு வீச்சு வீடுகள் சேதம்; இருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

கோண்டாவில் பகுதியில் நீண்ட கால இடைவெளியின் பின்னர் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஸ்ரீலங்கா விமானப் படையின் இரு பொம்மர்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

மக்கள் குடியிருப்புப் பகுதியை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டு வீச்சினால் ஒரு வீடு தகர்ந்துபோனது. மற்றொரு வீடு பலத்த சேதமடைந்தது. வழிப்போக்கர் ஒருவர் உட்பட இருவர் காயமடைந்தனர்.

கோண்டாவில் கிழக்கில் பலாலி பிரதான வீதியில்— தியாகி திலீபன் வீதியில் (கொட்டைக்காடு ஒழுங்கையில்) உள்ள வீடுகளே தாக்குதலுக்கு இலக்காகின.

வீட்டில் இருந்தவர்கள் குண்டு வீசப்படும் வேளை வெளியே ஓடியதால் மயிரிழையில் உயிர் தப்பிக்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஷெல் வெடித்த சத்தத்தில் அதிர்ந்தார் பிரதமர்!

வவுனியா, மார்ச் 9

வவுனியா நகருக்கு கடந்த வாரம் வந்திருந்த பிரதமர் டி. பி. விஜயதுங்க, தொலைவில் வெடித்த ஷெல் சத்தத்தினால் அதிர்ந்து போனார்!

வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடமாடும் செயலக நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை, இந்தச் சம்பவம் நடந்தது.

சத்தம் எங்கு கேட்கிறது,

[6 ஆம் பக்கம் பார்க்க]

## நெடுமாறன் உட்பட 70 பேர் நேற்று சென்னையில் கைது

சென்னை, மார்ச் 9

சென்னையில் தடைசெய்யப்பட்டிருந்த ஒரு கூட்டத்தை நடத்த முற்பட்ட சுமார் 70 பேர் நேற்று கைது செய்யப்பட்டனர். இவர்களில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளரும் சட்டசபை முன்னாள் உறுப்பினருமான பி. நெடுமாறனும் ஒருவர் என்று அறிவிக்கப்படுகின்றது.

தேசிய ஒருமைப்பாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும் தன்மை கொண்டதாகக் கூறி இந்த மாநாட்டை பொலீஸார் கடந்த வியாழக்கிழமை தடைசெய்திருந்தனர்.

மாநாட்டை நடத்துவதற்கு எந்தவித அனுமதியும் கோரப்படவில்லை. இந்த நிலையில் இந்தக் கூட்டத்தை நேற்று நடத்துவதற்கு புறப்பட்டுச் சென்றவர்கள் எழும்பூரில் வைத்து தடை உத்தரவை மீறியதற்காகக் கைது செய்யப்பட்டனர். [ஓ-எ]

## இரத்தம் அவசரம் தேவை

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கியில்—சகல பிரிவு இரத்தமும் தீர்ந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் அவசர நோயாளர்களுக்கு இரத்தம் வழங்க முடியாத ஆபத்து நிலை ஏற்பட்டுள்ளது. நோயாளரை உயிராபத்தில் இருந்து காப்பதற்கு பொதுமக்கள் மனிதாபிமான முறையில் இரத்தத்தை வழங்கி உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. [ஓ-15]

## குடாநாட்டில் நேற்று மகளிர் தின நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 9

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி குடாநாட்டின் பல பகுதிகளிலும் எழுச்சிக் கூட்டங்களும், கருத்தரங்குகளும் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினராலும், கூட்டுறவு அமைப்புகளின் மகளிர் அணிகளினாலும், மகளிர் அபிவிருத்தி நிலையத்தினராலும், பனம் பொருள் அபிவிருத்திச் சபை மகளிர் அணிகளினாலும் இவை நடத்தப்பட்டன.

யாழ். இந்துக் கல்லூரியில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும்—

கொக்குவில் இந்துக் கல்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி




அப்ப...... தொழில்நுட்பக் கோளாறு நீங்குது எண்டு சொல்லுங்கோ...!

# தேசிய விடுதலையும் பெண் விடுதலையும் ஒன்றாக வென்றெடுக்கப்பட வேண்டும்

## கிளிநொச்சி பெண்கள் மாநாட்டில் மாத்தயா உரை

கிளிநொச்சி, மார்ச் 9

— கிளிநொச்சி உதயன் செய்தியாளர் —

பெண் விடுதலையும், தேசிய இன விடுதலையும் ஒன்றாக வென்றெடுக்கப்பட வேண்டும். இன விடுதலை கிடைத்த பின்னர் பெண் ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடும் நிலை ஏற்படக்கூடாது — இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா [மாத்தயா].

கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழீழப் பெண்கள் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

அவர் தமது பேச்சில் மேலும் தெரிவித்ததாவது:-

உலகளாவிய அளவிலே அரைப்பங்கினரான பெண்கள், நீண்ட காலமாக அடக்கப்பட்டு - ஒடுக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பலர், இன்று விழிப்புணர்வு பெற்று, தமது உரிமைகளை வென்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புளூபோர்ட்" கப்பலில் புலிகளுக்கு ஆயுதமாம்!

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு லெபனானில் இருந்து ''புளூபோர்ட்'' என்ற கப்பல் மத்திய கிழக்கு ஊடாக இந்தியப் பகுதியை நோக்கி புறப்பட்டிருக்கிறதாம்!

கொழும்பு ''திவயின'' சிங்களப் பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

இது பற்றிய தகவல் கிடைத்துள்ளதை அடுத்து இலங்கை-இந்திய கடற் பிராந்தியங்களில் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ-10]


## இரணைமடுக் குளக் குறியீட்டுப் பதிவேடு-1992

கிளிநொச்சி மாவட்ட இரணைமடு நீர்ப்பாசன திருத்தப்பட்ட குளக்குறியீட்டுப் பதிவேடு பின்வரும் நிலையங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

★ காணி நிருவாகத் திணைக்களம், கச்சேரி.
★ நீர்ப்பாசனத் திணைக்களம்.
★ உதவி அரசாங்க அதிபர் பணிமனை, கிளிநொச்சி/கண்டாவளை.
★ கமநலச் சேவை நிலையம், இராமநாதபுரம்/ உருத்திரபுரம்/கிளிநொச்சி.
★ இரணைமடு திட்ட முகாமையாளர் பணிமனை.

பங்காளர்கள் பார்வையிட்டு திருத்தங்கள் இருப்பின் 81-03-1992ஆம் திகதிக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறு வேண்டப்படுகின்றனர்.

க. பொன்னம்பலம்,
மாவட்டஆணையர்/அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

04-03-1992

[சி/1589]



## 100 ஆவது ஆண்டு விழா

**அச்சுவேலி மகா வித்தியாலயம்**

**விழாக்குழு அங்குரார்ப்பணக் கூட்டம்**

காலம்; **15-03-1992** ஞாயிறு
நேரம்: பிற்பகல் 3 மணி
இடம்: வித்தியாலய மண்டபம்

நூற்றாண்டு விழா அங்குரார்ப்பணக் கூட்டம் வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறும்.

சகல பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

சி. செல்லையா,
தலைவர் (அதிபர்).

கு. கணேசன்,
செயலாளர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
மகாவித்தியாலயம், அச்சுவேலி.

[20014]



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

09-03-1992

மலர்வு: 12 — 04 — 1940



உதிர்வு: 08 — 02 — 1992

அமரர்

**ஏபிரகாம் யேசுதாசன்**

[இலங்கை வ. பி. போ. சபை பிரதேசக் கணக்காளர்]

எமது தலைவனின் இறுதிக்கிரியையில் பங்கு கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், முக்கியமாக அன்னாரது பூதவுடலை எமது இல்லத்தில் சேர்த்தவர்களுக்கும், வ. பி. போ. சபையினருக்கும், வேறு வழிகளில் உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

இல. 100, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

[20009]


## திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 9

மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையம் நாளை காலை 9 மணிக்கு கோப்பாய் மகா வித்தியாலயத்தில் வடபிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கத்தினால் திறந்து வைக்கப்படும். (உ)

## இன்றைய ஆட்டம்

கன்பரா, மார்ச் 9

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் இலங்கை இங்கிலாந்தை எதிர்த்து விளையாடும். இந்த ஆட்டம் ஆஸ்திரேலியாவில் இடம் பெறும். [த]

## இன்றும் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 9

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரின் ஏற்பாட்டில் யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெற்று வரும் உள்ளூர் உற்பத்திக் கண்காட்சியும், விற்பனையும் இன்றும் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது [ஒ]

## ஒஸியை அகற்ற தீவிர முயற்சி

கொழும்பு, மார்ச் 9

மேற்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து திரு. ஒஸி அபயகுணசேகராவை அகற்றுவதற்கு ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் ஒரு பிரிவினர் முயற்சித்து வருவதாகத் தெரியவருகின்றது.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் உட்கட்சிப் போராட்டத்தின் உச்சகட்டமாக இது அமைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

## புதிய நோட்டுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 9

இலங்கை வங்கி புதுவருடத்துக்கு வாடிக்கையாளர்களுக்கு வழங்கவென புதிய பண நோட்டுக்களையும், நாணயக் குத்திகளையும் கப்பல் மூலம் எடுத்து வந்துள்ளது.

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'லில்லி' கப்பலில் இவை எடுத்துவரப்பட்டுள்ளன. (ஒ-3)

## நோயின் உபாதையே காரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த இராசதுரை அமிர்தலிங்கம் என்பவர் —

தொய்வு நோயின் உபாதை தாங்க முடியாமலே தீ மூட்டித் தற்கொலை செய்து கொண்டார் என்றும் —

தம்மைப் பராமரிக்க உதவி யில்லாததால் அல்ல என்றும் —

அவரது மனைவி திருமதி மனோன்மணி அமிர்தலிங்கம் தெரிவிக்கிறார். [அ]

## மத்தியஸ்தர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 9

உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 9.30 மணிக்கு விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவின் கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஏற்பாடுகள் குறித்து இக்கலந்துரையாடலில் ஆராயப்படும்.

மத்தியஸ்தர் சங்கப் பிரதிநிதிகளை இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. [உ]

**உலகக் கிண்ண கிரிக்கெட்**

## நியூஸிலாந்து அணிக்கு தொடர்ந்து 5ஆவது வெற்றி

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் கலந்து கொண்ட ஐந்தாவது ஆட்டத்திலும் வெற்றி பெற்று இது வரை தோல்வியடையாத அணி என்ற சாதனையை நியூஸிலாந்து தக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

நேற்று ஒக்லாந்தில் மேற்கிந்திய அணிக்கு எதிரான ஆட்டத்தில் நியூஸிலாந்து 5 விக்கெட்டுகளினால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 203 ஓட்டங்களைப் பெற்றது. பிரெய்ன்லாரா 52 ஓட்டங்களைப் பெற்றார்.

நியூஸிலாந்து அணி 48.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 206 ஓட்டங்களைப் பெற்று வெற்றி வாகை சூடியது. நியூஸிலாந்து அணித் தலைவர் மார்டின்குரோ 81 ஓட்டங்களையும் மார்க் கிரெய்க்பாச் 63 ஓட்டங்களையும் பெற்றனர். [உ-த]

## தென்னாபிரிக்காவிடம் பாகிஸ்தான் மண் கவ்வியது!

பிரிஸ்பேர்ன், மார்ச் 9

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று மற்றொரு ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணியிடம் பாகிஸ்தான் மண் கவ்வியது.

பிரிஸ்பேர்ன் நகரில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் தென்னாபிரிக்கா 20 ஓட்டங்களினால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்க அணி 50ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 211 ஓட்டங்களைப் பெற்றது.

பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கிய சிறிது நேரத்தில் மழையினால் ஆட்டம் தடைப்பட்டது. பின்னர் ஆட்டம் 36 ஓவர்களாகக் குறைக்கப்பட்டு வெற்றிக்கான ஓட்ட இலக்கு 194 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால் பாகிஸ்தான் அணி 36 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 173 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

## நாடுகள் பெற்ற புள்ளிகள்

மெல்போர்ன், மார்ச் 9

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கு கொள்ளும் ஒன்பது நாட்டு அணிகளும் இதுவரை பங்குபற்றிய ஆட்டங்கள் மற்றும் வெற்றி, தோல்வி, அதன் மூலம் பெற்ற புள்ளிகள் ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு:-

| நாடுகள் | ஆட்டம் | வெற்றி | தோல்வி | சமம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 5 | 5 | — | — | 10 |
| இங்கிலாந்து | 4 | 3 | — | 1 | 7 |
| தென்னாபிரிக்கா | 5 | 3 | 2 | — | 6 |
| ஸ்ரீலங்கா | 5 | 2 | 2 | 1 | 5 |
| இந்தியா | 5 | 2 | 2 | 1 | 5 |
| மேற்கிந்தியா | 5 | 2 | 3 | — | 4 |
| ஆஸ்திரேலியா | 5 | 2 | 3 | — | 4 |
| பாகிஸ்தான் | 5 | 1 | 3 | 1 | 3 |
| ஸிம்பாப்வே | 5 | — | 5 | — | — |

## உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் ஆரம்பம்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் வலைப்பந்தாட்ட மற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இவ்வாரத்தில் ஆரம்பமாகின்றன.

### வலைப்பந்தாட்டம்

வலைப்பந்தாட்டப் போட்டிகள் வலிகாமம் கிழக்குப் பிரிவுக்கு தனியாகவும்—

வலிகாமம் மேற்கு, வடமராட்சி, தென்மராட்சி ஆகியவற்றுக்கு ஒன்றாகவும் நடத்தப்படும். பின்னர் இரு பிரிவுகளிலும் வெற்றியீட்டும் அணிகளுக்கிடையில் அரையிறுதிப் போட்டிகள் நடைபெறும்.

வலிகாமம் கிழக்குப் பிரிவுக்கான போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

### உதைபந்தாட்டம்

உதைபந்தாட்டப் போட்டியின் முதற் சுற்று ஆட்டங்கள் வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்கு மற்றும் வடமராட்சி — தென்மராட்சி இணைந்த பிரிவு ஆகியவற்றுக்கு தனித்தனியாக நடைபெறும்.

பிரிவு ரீதியாக முதற் சுற்று ஆட்டங்களில் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் குழு நிலை ரீதியில் இறுதிச் சுற்றுக்குத் தெரிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

★ ★

யாழ். உதைபந்தாட்ட லீக் 11 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

பதினாறு கழக அணிகள் பங்குபற்றும் இந்த ஆட்டம் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். [உ]

**'உதயன்' கிண்ணத்துக்காக**

## நாளை கோப்பாயில் உடற் பயிற்சிப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். கல்வித் திணைக்களத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் 'உதயன்' வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் உடற் பயிற்சிப் போட்டிகளின் இறுதிச் சுற்றுப் போட்டிகள் நாளை காலை 8 மணி முதல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறும்.

யாழ். மாவட்டத்தில் ஐநூறுக்கு மேற்பட்ட கல்லூரி அணிகளுக்கிடையில் — கோட்ட மட்டத்தில் — நடத்தப்பட்ட முதல் சுற்றுப் போட்டிகளில் இருந்து தெரிவு

[6ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# காங்கிரஸ் அரசின் தலைவிதி இன்று நிர்ணயிக்கப்படும்

## ஜனாதிபதி உரை மீது வாக்கெடுப்பு

புதுடில்லி, மார்ச் 9

ஒன்பது மாதங்களாக இந்தியாவை ஆட்சி செய்து வரும் இந்திரா காங்கிரஸ் அரசு கவிழுமா அல்லது நீடிக்குமா என்பதைத் தீர்மானிக்கும் ஜனாதிபதி உரை மீதான வாக்கெடுப்பு இன்று இந்திய லோகசபையில் இடம் பெறுகின்றன.

நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் அரசு, தனது தோழமைக் கட்சிகளுடன் சேர்ந்து அறுதிப் பெரும்பான்மை பெறுவதற்கு இன்னும் ஆறு எம். பிக்களின் ஆதரவு தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், நெருக்கடியை வெற்றிகரமாகச் சமாளித்து விடுவோம் என்று பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நாக்பூரில் செய்தியாளர்களிடம் சனிக்கிழமை மாலை தெரிவித்தார்.

காங்கிரஸ் அரசைத் தோற்கடிக்க எதிர்க்கட்சிகள் கங்கணம் கட்டியுள்ளமை தமக்குக் கவலை எதனையும் தரவில்லை என்றும் அவர் சொன்னார்.

வாக்கெடுப்பில் அரசு தோற்றால் புதிய தேர்தலை நடத்தும் என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் குலாம் நபிஆஸாத் கூறியுள்ளது ஓர் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதே என்று செய்தியாளர் கேட்டதற்கு —

''இது அச்சுறுத்தல் அல்ல; காங்கிரஸ் எம். பிக்கள் அனைவரும் தவறாது சபைக்கு வரவேண்டும் என்பது இதன் அர்த்தமாகும்'' — என்றும் பிரதமர் நரசிம்மராவ் பதிலளித்தார். [உ-எ]

## புதிய கொள்கைப்பிரகடனம் சுதந்திரக்கட்சி தயாரிக்கிறது

சுதந்திரக் கட்சி புதிய கொள்கைப் பிரகடனம் ஒன்றைத் தயாரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் இறைமை பாதிக்கப்படாத வகையில் சுயநிர்ணய உரிமையைத் தீர்மானிக்கும் உரிமை வடக்கு-கிழக்கு மக்களுக்கு இருக்கவேண்டும் என்று தனது புதிய கொள்கைப் பிரகடனத்தில் சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட 9 பேர் கொண்ட நடவடிக்கைக் குழு, 11 பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கூடிய கட்சியின் மத்திய குழு இந்த அறிக்கையை விரிவாக ஆராய்ந்தது.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கீழே வைத்து, ஜனநாயக வழிமுறையை ஏற்று, ஏனைய கட்சிகளும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட இடமளித்தால், சுதந்திரக்கட்சி விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தும் எனவும்—

அதிகாரப்பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சுதந்திரக் கட்சியின் கொள்கை என்றும் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்துடன் சிறந்த நெருக்கமான நல்லுறவைக் கொண்டிருக்க வேண்டும் என்பது இக்கட்சியின் மற்றொரு கொள்கை என்றும் அவர் சொன்னார். [உ-எ]

## தபாலகங்கள் இனிமேல் மாகாண மட்ட நிர்வாகத்தில்

கொழும்பு, மார்ச் 9

தபால் திணைக்களத்தின் வேலைகள் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல் மாகாண ரீதியில் பரவலாக்கப்படவுள்ளன.

இதன்படி மாகாணத்துக்கு ஒருவர் என, ஒன்பது பிரதித் தபால் மா அதிபர்கள் நியமிக்கப்படுவார்கள்.

அவ்வப்பகுதி தபால் திணைக்களத்திற்கு இவர்கள் பொறுப்பாக இருப்பார்கள்.

கொழும்பில் செய்யப்பட்டு வந்த வேலைகள் இவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள தபாற்கந்தோர்கள், உபதபாற்கந்தோர்கள் ஏஜென்ஸி தபால் நிலையங்கள் ஆகியவற்றின் முழு நிர்வாகமும் மாகாண பிரதித் தபால் மா அதிபரிடம் ஒப்படைக்கப்படும். [அ-எ]

## வரிவிலக்கு

கொழும்பு, மார்ச் 9

அங்கீகரிக்கப்பட்ட தர்மஸ்தாபனங்களுக்கு அளிக்கப்படும் நன்கொடைகளுக்குத் தொடர்ந்து வரிவிலக்கு அளிக்க அமைச்சரவை கடந்த புதன்கிழமை முடிவு செய்ததாக அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார். (த-10)

## சைக்கிள்கள் மீட்கப்பட்டன

தென்மராட்சி, மார்ச் 9

சாவகச்சேரிப்பகுதிக் காவல் துறையினர் திருடப்பட்ட 9 சைக்கிள்களை கடந்த மாதம் மீட்டெடுத்துள்ளனர். இதில் ஒரு 'லேடீஸ்' சைக்கிளும் அடங்கும்.

உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி பெற்றுக் கொள்ளலாம் என்று காவல் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். [த-117]

## நீர்வளத்தை பாதுகாக்க திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் தேசநிர்மாணிகள் பிரிவின் அனுசரணையுடன், யாழ். குடாநாட்டு நீர் வளங்களைப் பாதுகாப்பது தொடர்பான திட்டம் ஒன்றை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தலைமையிலான குழு தயாரித்து வருகிறது. புவியியல் அமைப்பு, நீரின் பாவனை, நன்னீரைத் தேக்குதல், உவர் நீர்த் தடுப்பு ஆகிய சகல அம்சங்களும் ஆராயப்பட்டு. இப்பெருந் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. [த]

## விளாத்திக் குளத்தில் விமானக்குண்டு வீச்சு

வவுனியா மாவட்டம் விளாத்திக் குளம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி விமானக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதலில் பல வீடுகள் சேதமடைந்தன. இடிபாடுகளுக்குள் சிக்கி இருவர் பலத்த காயமடைந்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த சின்னப்பு இலட்சுமி (வயது 50), சின்னையா கலாதேவி (வயது 14) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். (த-15)

## அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வு

### தனியார் கல்வி நிறுவனங்கள்: 14, 15இல் மூட கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 9

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வு எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

இதனையொட்டி எதிர்வரும் 14, 15ஆம் திகதிகளில் தனியார் கல்வி நிறுவனங்களை மூடி தேர்வு சிறப்புற நடைபெற ஒத்துழைக்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு கேட்டுள்ளது. [உ]

## அகதிகளை ஏற்றிவர

### ராமானுஜம் கப்பல் சேவை இன்னும் இரு தடவைகள்

கொழும்பு, மார்ச் 9

மன்னார்ப்பகுதி அகதிகளை தலைமன்னார் — இராமேஸ்வரம் பாதையில் ஏற்றிவரும் ராமானுஜம் கப்பலின் சேவை இன்னும் இரண்டு பயணங்களுடன் இடைநிறுத்தம் செய்யப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது.

இன்றும், எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் ராமானுஜம் கப்பல் சேவை இடம்பெறும்.

இந்த இரு சேவைகளின் போதும் மன்னாரைச் சேர்ந்த மொத்தம் 954 பேர் தலைமன்னாரை வந்தடைய விருப்பதாக தெரிவித்திருக்கின்றார். அதன் பின்னர் இக்கப்பல் சேவை இடைநிறுத்தம் செய்யப்படும். [உ-எ]

## இந்திய தீவிரவாதக் குழுக்களுக்கு பங்களாதேஷ், பர்மாவிலும் பயிற்சி

புதுடில்லி, மார்ச் 9

இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தானில் பயிற்சியளிக்கப்படுவது போன்று பர்மா மற்றும் பங்களாதேஷிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

இந்திய மத்திய வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி நேற்று நாடாளுமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசாங்கங்களிடம் இந்திய அரசு தனது நிலையைத் தெரிவித்திருப்பதாகவும் அமைச்சர் சோலங்கி கூறினார்.

இதன் காரணமாக இந்தியாவின் பாதுகாப்புக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தடுப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

இன்னொரு கேள்விக்குப் பதிலளிக்கையில்—

காஷ்மீர் பிரச்சினையில் தலையிடும் அதிகாரம் இஸ்லாமிய நாடுகளுக்கு இல்லை என்றார் அவர். [உ-எ]

## பிறப்பு அத்தாட்சி பத்திரங்கள்

நவாலி, மார்ச் 9

யாழ். பிறப்பு- இறப்பு பதிவாளர் காரியாலயத்தில் போட்டோப் பிரதி மூலம் பிறப்பு அதாட்சப் பத்திரங்களைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கு அவ்வலுவலகத்தில் வைத்து பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் தற்போது நேரில் வழங்கப்படுகின்றன. [த-100]

## பாராட்டும் நன்றியும்

சுன்னாகத்தில்
புகழ் பெற்ற புத்தக வியாபாரிகளான
**துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்**
ஸ்தாபனத்துக்கு நன்றி கூறுகின்றோம்.

14-02-1992 இல் மேற்படி ஸ்தாபனத்தில் நான் தவறவிட்ட 'சிற்றிசன்' கைக் கடிகாரத்தினை மீண்டும் என்னிடம் ஒப்படைத்தமைக்காக துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ் ஸ்தாபனத்தினரைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

– செல்வி வாசுகி சின்னத்தம்பி.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.
1992-02-06

[சி-1587]

சுன்னாகம் ஐயனார் ஆலய
வருடாந்த மகோற்சவத்தையொட்டிய
**தெய்வீக இசையரங்கும் சமயச் சொற்பொழிவும்**

**09-03-1992 — 2ஆம் திருவிழா**
மாலை 6-45 — 8-15 இசைக் கச்சேரி
சங்கீத பூஷணம் V. சிவஞானசேகரம்

**10-03-1992 — 3ஆம் திருவிழா**
மாலை 6-45 — 8-15 இசைக்கச்சேரி
சங்கீதரத்தினம் V. ராமேஸ்வரன் அவர்கள்

**11-03-1992 — 4ஆம் திருவிழா**
மாலை 6-45 — 8-15 இசைக் கச்சேரி
சங்கீத வித்துவான் K. இராமநாதன் அவர்கள்

**12-03-1992 — 5ஆம் திருவிழா**
மாலை 6-45 — 8-15 இசைக் கச்சேரி
சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம் அவர்கள்

**13-03-1992 — 6ஆம் திருவிழா**
மாலை 6-45 — 8-15 இசைக் கச்சேரி
சங்கீத பூஷணம் திலக நாயகம் போல் அவர்கள்

**14-03-1992 — 7ஆம் திருவிழா**
மாலை 6-45 — 8-15 வயலின் - சோலோ கச்சேரி
இசை ஞான திலகம்
வி. ஆர். இராதாகிருஷ்ணன் குழுவினர்

**15-03-1992 — 8ஆம் திருவிழா**
மாலை 6-45 — 8-15 இசைக் கச்சேரி
சங்கீத பூஷணம் S. பத்மலிங்கம் அவர்கள்

**16-03-1992 — 9ஆம் திருவிழா**
மாலை 6-45 — 8-15 இசைக் கச்சேரி
சங்கீத வித்துவான்
M. ஸ்ரீரங்கநாதன் அவர்கள்

**17-03-1992 — தேர்த்திருவிழா**
காலை 10-30 மணிக்கு
மாலை 6-45 — 8-15 பண்ணிசை
பண்ணிசை வித்தகர்
இரா. திருஞானசம்பந்தர் அவர்கள்

**18-03-1992 — தீர்த்தோற்சவம்**
காலை 10-30 மணிக்கு
மாலை 6-45 — 8-15 இசைக் கச்சேரி
சங்கீத பூஷணம்
பொன். சுந்தரலிங்கம் அவர்கள்

தினமும் மாலை 8-15 — 9-15 மணி வரை சமயச் சொற்பொழிவு இ. ஜெயராஜ்
(அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர்)

– ஐயனார் ஆலயம், சுன்னாகம்.

[20011]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய Panasonic Video Camera விற்பனைக்கு உண்டு. Model M8000 [MS Model மாதிரி] Complete Set தி. சிவநாதன் [மாஸ்ரர்] மூத்த விநாயகர் கோவிலடி, கரண வாய் தெற்கு, கரவெட்டி.

[19952]

## மணமக்கள் தேவை

யாழ். இந்து, 28 வயது நிரம்பிய ஜேர்மனியில் தொழில்புரியும் மணமகனுக்கு ஜேர்மனியில் பெண் தேவை. நட்சத்திரம் கேட்டை, செவ்வாய் 12 இல், கிரக பாவம் 20/16, இங்கிலாந்திலும் பெண்கள் தேவை, அமெரிக்காவிலும் Ph. D. Engineer உண்டு. ABCDE, 20, கண்டி றோட், சுண்டிக்குளி.

[19991]

செவ்வாய்க் குற்றம் உள்ளவர்களான 29 வயது லண்டனிலுள்ள B. Sc. பெண்ணுக்கும், 30 வயது லண்டனிலுள்ள B. Sc. எஞ்சினியருக்கும், லண்டன் மணப்பெண்ணும், 29 வயது பிரான்ஸ் மணமகனுக்கும், கனடா செல்ல விரும்பும் 23 வயதுப் பெண்ணுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.

[20006]

## மணமக்கள் தேவையா?

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் நிறைய இருக்கிறார்கள். மாற்றுத் திருமணத்தை விரும்பாத சோடிகளுக்கும் கூட இலகுவாகத் திருமணம் செய்யலாம். மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.

[20005]

## ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கில (Stencils) ரைப்பிங் வேலைகள் செய்து கொடுக்கப்படும். பியூட்டோ, 39/17, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 3 ஆம் ஒழுங்கை, கிளை பிரதான வீதி, சங்கானை.

[சி-1629]

## துர்க்கா திருமண சேவை

சகல தொழில்களிலும், மணமகன்கள் உண்டு. எல்லா மதங்களிலும் திருமணத் தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே எஸ். வீதி, மல்லாகம்.

(5967)

## வெளிவந்து விட்டன

ஏப்ரலில் நடைபெறவுள்ள 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் படுத்துவதற்கான புதிய முறையிலான துரித மீட்டல் பயிற்சிகள், கணிதம் 5 வினாத்தாள்கள், தமிழ் 5 வினாத்தாள்கள் விற்பனையாகின்றன. ஆக்கம்; திருமதி ப. இளங்கோ (உடுவில் மகளிர் கல்லூரி) எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

([illegible]/1586)

## நாடக நூல்

200 வானொலி நாடகங்களும், 22 மேடை நாடகங்களும் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நாடகநூல் முதலாம் பிள்ளை. 30/-, 10 வானொலி நாடகங்கள்.

[19835]

## வினா — விடை

உயர்தர விஞ்ஞான பாடங்களுக்கான கடந்த கால வினா—விடைகள் [Pass Papers], மாதிரி வினாத்தாள்கள் [Model Papers] விற்பனையில் உள்ளன. தொடர்பு; உயர் தரா தரக்கல்வி நிலையம்,['A' Level Centre] 1 ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

[சி/1649]

## அரக்கோணத்தில் விமான நிலையம்

சென்னை, மார்ச் 9

தமிழ்நாடு, அரக்கோணம் பகுதியில் கட்டப்பட்டுள்ள 'ராஜாளி' கடற்படை விமானத்தளம் எதிர்வரும் புதன்கிழமையில் இருந்து செயற்படவிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் அன்றையதினம் உத்தியோகபூர்வமாக இந்த விமானத் தளத்தைத் திறந்து வைப்பார்.

[ஒ-எ]

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



தோற்றம்: 16 - 03 - 1968

மறைவு: 12 - 10 - 1991

### செல்வி செல்வராணி தேவராசா

பாரெல்லாம் போற்ற பார்த்தோர் திகைக்க
திருநெல் வேலியில் பிறந்து, கல்வியங்காட்டில்
வளர்ந்த செல்வியே!
உன்னுருவம் படமாக தோன்றிடும் இவ் வேளையில்
இருபத்து மூன்று ஆண்டு எமையெல்லாம் மகிழ்வித்து
மணமாலை சூட்ட நாமெல்லாம் காத்திருக்க
பொல்லாத காலனவன் சொல்லாமல் கவர்ந்தானே.
ஆறாது உம் நினைவு தீராது எம் கவலை
பிறப்பார் இறப்பது நியதி என்றெண்ணி
உன் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டு
கிறோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்,
உறவினர்கள்.

3 ஆம் கட்டை,
கல்வியங்காடு.

[19998]

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



மண்ணிடை வரவு: 11—1—1941

விண்ணிடை விரைவு: 8—2—1992

### ஜேம்ஸ் வீரசிங்கம் துரைசிங்கம்

எங்கள் அன்பின் குடும்பவிளக்காய், பாசத்தின் ஒளியாய், இதயத்தின் தெய்வமாய், பண்பின் உறைவிடமாய் திகழ்ந்த அமரர் ஜேம்ஸ் வீரசிங்கம் துரைசிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று [09-03-92) திங்கட்கிழமை நண்பகல் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் நண்பர்களையும், உறவினர்களையும் இவ்வைபவத்தில் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் இல்லத்தலைவரின் இறுதிக்கிரியையில் பங்கு கொண்டவர்களுக்கும், மற்றும் சகல விதத்திலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

15, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

(20012]

## ஓராண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு: 26—8 1972

பகைவன் அழிப்பு: 19—2—1991

### செல்லப்பா தங்கராசா

(அல்லிப்பளை)

திதி: 09-03-1992

நிலையில்லா வாழ்வது நிஜமே
நினையாவுன் பிரிவது கனவே
உன்னுருவை தேடுவது கற்பனையே
என் இதயத்தீப ராசாவே.

இவ் அஞ்சலியில் கண்ணீரைக் காணிக்கையாக்கும்;

தாய் செல்லம்மா, சகோதரன் யோகநாதன், சகோதரிமார் புனிதவதி, கிருஷ்ணவேணி, புஸ்பஞான தேவி, உதயதேவி, செல்வரூபி, பெரியம்மாவும்; பிள்ளைகளும், மருமக்களும், மைத்துனிமாரும், பிள்ளைகளும்.

அல்லிப்பளை, பளை.

(20003)

## அஞ்சலி

மூத்த வர்த்தக ஆசிரியரும்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

முன்னாள் துணை அதிபருமான

### அமரர் க. கந்தசாமி

அவர்களின்



ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வர்த்தக ஆசிரியர்கள் சார்பாக,
வணிக வள நிலையம், யாழ்ப்பாணக் கோட்டம்.

[19994]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## தமிழை மறந்தால்...

கனடாவில் வாழும் ஈழத் தமிழர்கள் தமது குழந்தைகளுக்கு தமிழைப் பேசக் கற்றுக்கொள்ள மட்டுமல்ல, எழுதவும், படிக்கவும் பழக்க வேண்டும்.

இவ்வாறு ரொறண்டோ நகரில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில், ஈழத்தில் தலைசிறந்த கல்விமானாகவும், நிர்வாகத்துக்குப் பேர்போன அதிபராகவும் விளங்கிய மூதறிஞர் 'ஒரேற்றர்' சுப்பிரமணியம் அறிவுறுத்தி இருக்கிறார்.

கனடாவில் வாழும் தமிழர்கள் தங்கள் வீடுகளில் பிள்ளைகளுடன் ஆங்கிலத்திலேயே பேசுகிறார்கள். அனேகமான தமிழ்க் குழந்தைகளுக்கு தமிழ் அரிச்சுவடியே தெரியாது. இந்த நிலை நீடித்தால் அவர்கள் விரைவில் தமது இனத்தின் தனித்துவ அடையாளத்தை இழந்து விடுவார்கள்— என்றும் அவர் கவலை வெளியிட்டிருக்கிறார்.

கனடாவுக்குச் சென்ற ஈழத் தமிழர்கள் மட்டும் தமது இனத்தின் தனித்துவ அடையாளத்தை இழந்துவிடும் ஆபத்து வரவில்லை. இங்கிருந்து அகதிகளாக ஏனைய மேலை நாடுகளுக்குச் சென்றிருப்பவர்களுக்கும் அதே ஆபத்து நிலை தோன்றியிருக்கிறது.

ஒருவன், தான் வாழும் சூழ்நிலைக்கு ஏற்பத் தன்னை மாற்றிக்கொண்டால் மட்டுமே சென்ற இடத்தில் சிறப்பாக வாழ்வதற்கு அவனுக்கு வாய்ப்பு உண்டாகும் என்பது இயல்புதான். ஆனால் அதற்காகத் தனது சொந்த மொழியையும், கலை, பண்பாடுகளையும் மறந்து அல்லது மறைத்துத் தனது தனித்துவத்தை இழக்க வேண்டும் என்பதல்ல.

மூதறிஞர் அவர்கள் சுட்டிக்காட்டியது போல, தமக்கெனத் தனித்துவமான மொழியும், பண்பாடுகளும் உள்ளவர்கள் வேற்று நாட்டில் வாழ்ந்தாலும் தங்கள் வீடுகளில் அவற்றைப் பேசவும், பின்பற்றவும் தவறுவதில்லை. ஆனால் தமிழர்கள் இந்த விடயத்தில் மிகவும் பலவீனமானவர்களே.

தமிழ்ப் பகுதிகளில் நிலவும் பாதுகாப்பற்ற சூழ்நிலையைத் தொடர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்ற தமிழர்கள் தமது தாய்மொழியை மறக்கும் போக்கினைக் கடைப்பிடிக்கத் தொடங்கியிருப்பது இனப் பற்றுள்ள எவருக்குமே கவலை தருவதாகும்.

பிஜித் தீவில் பெயருக்கு மட்டும் தமிழர்களாக வாழும் தமிழர்களைப் போல, கனடா, ஜேர்மனி, ப்ரான்ஸ், இத்தாலி, சுவிட்சர்லாந்து. நோர்வே. டென்மார்க், ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்த ஈழத்தமிழர்களும் மாறிவிடக் கூடும்.

ஆனால் இவர்களில் மிகப் பெரும்பான்மையினர் மீண்டும் ஈழத் தமிழ் மண்ணுக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்பது திண்ணம். எல்லோரையும் அகதிகளாக ஏற்கவோ அல்லது குடியுரிமை அளிக்கவோ எந்த ஒரு நாடும் முன்வரப் போவதில்லை. வெளிநாட்டு அகதிகளை மேலை நாட்டவர்கள் வேண்டாதவர்களாக பார்க்கத் தொடங்கி விட்டார்கள். துன்புறுத்தவும் ஆரம்பித்து விட்டார்கள்

எனவே வெளிநாடுகளில் தங்கியுள்ள தமிழர்கள் தமது மொழியையும், பண்பாடுகளையும் மறந்து வருவது, அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டு, பெண்ணின் நிலைக்கு அவர்களை ஆளாக்கும்!

# எப்படியான வழக்குகளை விசாரிக்க சர்வதேச நீதிமன்றுக்கு தகுதியுண்டு?

## அதன் இயக்கமும் பலாபலன்களும்

இந்திய அமைதிப்படை வடக்கு — கிழக்கில் நடத்திய அட்டூழியத்தை, இந்தியாவுக்கு எதிரான குற்றச் சாட்டாக வைத்து விடுதலைப் புலிகள் இயக்கம் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு உத்தேசித்துள்ளது அமெரிக்கா. பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு எதிரான குற்றச் சாட்டுகளை லிபியா சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது.

இந்தப் பின்னணியில் சர்வதேச நீதிமன்றம் பற்றிய தகவல்களை வாசகர்களுக்காக இங்கு வெளியிடுகின்றோம்.

சர்வதேச அரங்கில் அண்மைக் காலங்களில் முக்கிய பங்கு பணியாற்றி வரும் அமைப்பு ஐக்கிய நாடுகள் சபையாகும். ஐக்கிய நாடுகள் சபையின் நீதித்துறை அங்கமாகத் திகழும் ஒரே ஒரு அமைப்பு சர்வதேச நீதிமன்றம் (International Justice of Court). இதன் உருவாக்கம், அமைப்பு, தொழிற்பாடு, நியாயாதிக்கம் போன்ற விடயங்கள் பற்றி இங்கு ஆராய்வோம்.

1921 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து 1945 வரை நீதிமன்றங்களின் விதித் தொகுப்புகளுக்கு இணங்க இயங்கி வந்த நிரந்தர சர்வதேச நீதிமன்றம் என்ற அமைப்புக்கு வாரிசாக 1946 இல் "சர்வதேச நீதிமன்றம்" உருவாக்கப்பட்டது. அது நெதர்லாந்தின் மாகாணத் தலைநகரமான "ஹெய்க்" நகரில் நிரந்தரமாக அமைந்துள்ளது.

### நீதியியல்

ஆரம்பத்திலிருந்த நிரந்தர நீதிமன்றத்துக்கும், பின்னர் உருவாக்கப்பட்ட சர்வதேச நீதிமன்றத்துக்கும் வித்தியாசம் உண்டு. முன்னையது ஐக்கிய நாடுகள் சபையில் ஓர் அங்கமல்ல. அதற்குரிய விதித் தொகுப்பினை ஒப்புக்கொண்ட நாடுகளே அதன் உறுப்பினர்களாகவும் கருதப்பட்டனர்.

ஆனால் சர்வதேச நீதிமன்றம் ஐ. நாவின் ஓர் அங்கமாகும். ஐ. நாவின் உறுப்பு நாடுகள் அனைத்தும் சர்வதேச நீதிமன்றத்தின் உறுப்பு நாடுகள் ஆகும். எனினும் விதிவிலக்காக சில நாடுகள் ஐ. நாவின் உறுப்பினராக இல்லாமல் சர்வதேச நீதிமன்றத்தில் மட்டும் உறுப்பினர்களாக இருக்கலாம். அதாவது பாதுகாப்புச் சபையின் நிபந்தனைக்கு அமைவாக ஐ. நா. பொதுச் சபையினால் அவை அவ்வாறு அனுமதிக்கப்படலாம். சுவிற்ஸர்லாந்து, லிச்டென்ஸ்டீன் போன்ற நாடுகளை இதற்கு உதாரணமாக கூறலாம்.

### அமைப்பு

சர்வதேச நீதிமன்றில் 15 பேர் நீதிபதிகளாகக் கடமை புரிவர். இவர்களின் பதவிக் காலம் 9 ஆண்டுகள் ஆகும். மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை இவர்களில் 5 பேர் பதவியிலிருந்து விலகுவர். தெரிவின் போது 5 பேர் 9 ஆண்டு காலத்திற்கும், 5 பேர் 6 ஆண்டு காலத்திற்கும், 5 பேர் 3 ஆண்டு காலத்திற்கும் எனத் தேர்ந்தெடுக்கப்படுவர். இதன் காரணமாக நீதிமன்றத்தின் தொடர்ச்சி பாதுகாக்கப்படும். இவர்களே மீண்டும் தெரிவு செய்யப்படலாம்.

சர்வதேச நீதிமன்றத்தில் இடம் ஒன்று காலியாகும் போது ஐ. நாவின் பொதுச் செயலாளர் நீதிபதி தேர்தலுக்கு 3 மாதங்களுக்கு முன்பாக நியமனங்களை சமர்ப்பிக்கும்படி உலக நாடுகளின் குழுவினர்களையும், நிரந்தர நடுநிலைத் தீர்ப்பு மன்ற உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்வார்.

### நீதிபதிகள் உலகக் குடிமக்கள்

நியமனத்திற்கு வந்த பெயர்களை பட்டியல் செய்து ஐ. நா. பொதுச் சபைக்கும், பாதுகாப்புச் சபைக்கும் ஐ. நா. பொதுச்செயலாளர் அனுப்பி வைப்பார். பின்னர் பொதுச் சபையும், பாதுகாப்புச் சபையும் தனித்தனியே நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்க முனையும்.

இரு சபைகளிலும் பெரும்பான்மை வாக்குகள் பெற்றவரே தேர்ந்தெடுக்கப்பட்டவராகக் கருதப்படுவார். நீதிபதித் தேர்தலில் வல்லரசுகள் வீட்டோ உரிமையைப் பிரயோகிக்க இடமில்லை.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தங்களுக்குள் ஒரு தலைவரையும், துணைத் தலைவரையும் தேர்ந்தெடுப்பார்கள். இவர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகள் ஆகும். வெளியாள் ஒருவர் பதிவாளராக இருப்பார்.

நீதிபதியாக நியமிக்கப்பட்டவர்கள் பின்னர் உலகக் குடிமக்களாகக் கணிக்கப்படுவர். அவர்கள் ஐக்கிய நாடுகளின் குடியுரிமையைப் பெற்றவர்களாகவும் கருதப்படுவர். தங்கள் தாய்நாட்டுக்காக அவர்கள் எதையும் செய்ய முடியாது. ஐ. நாவுக்காகவே செயலாற்ற வேண்டும்.

ஒரு நீதிபதி, நீதிபதியாக இருக்க அருகதை அற்றவராக இருந்தால், ஏனைய நீதிபதிகள் ஒரு முகமாக வாக்களித்து அவரைப் பதவியிலிருந்து அகற்றலாம். வேறு எந்த விதத்திலும் ஒரு நீதிபதி பதவி இழக்கமாட்டார். ஆனால் பதவி இழந்த ஒருவர் பின் தன் சொந்த நாட்டில் கூட எந்தப் பதவியையும் வகிக்க முடியாது.

### விசாரணைக்கு சம்மதம் தேவை

நாடுகளே சர்வதேச நீதிமன்றத்தின் முன் திறத்தவர்களாக (Parties)வர முடியும். மேலும் இந்த உரிமை ஐக்கிய நாடுகள் சபைக்கும் அதன் அங்கங்களுக்கும் அதனுடன்தொடர்புடையசிறப்பு அமைப்புகளுக்கும் (Specialist Agencies) உண்டு. திறத்தவர்களின் சம்மதமின்றி நீதிமன்றம் எந்த வழக்கையும் விசாரிக்க முடியாது. நாடுகள் திறத்தவர்களாக உள்ள எந்த வழக்கையும் அவற்றின் சம்மதத்துடன் தான் நீதிமன்றம் விசாரிக்கலாம்.

நாடுகளைப் பொறுத்தவரை கூட ஐ. நாவின் உறுப்பு நாடுகளும், சர்வதேச நீதிமன்றின் விதித் தொகுப்பை ஏற்றுக்கொண்ட நாடுகளுமே இவ்வுரிமை பெற்றவை ஆகும். அவ்வாறு இல்லாத நாடுகள் ஐ. நாவின் பொதுச்சபையினால், பாதுகாப்புச்சபையின் நிபந்தனைக்கு அமைவாக திறத்தவர்களாக வர அனுமதிக்கப்படலாம்.

நாடுகளுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றம் தானாக வழக்குத் தொடர முடியாது. உலகிலுள்ள நாடுகளின் சம்மதமே நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தின் அடிப்படையாகும் என சர்வதேசச் சட்டத்தின் மற்றொரு விதி கூறுகின்றது. அதாவது சர்வதேச நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் நாடுகளின் சம்மதத்தைப் பொறுத்ததே.

ஆரம்பத்தில், கட்டாய நியாயாதிக்கத்துக்கு சிறிய நாடுகளிடமிருந்து எதிர்ப்புக்கள் கிளம்பின. ஏனெனில் கட்டாய நியாயாதிக்கம் இருந்தால், எந்தச் சிறிய நாட்டுக்கும் எதிராக வேறொரு நாடு நடவடிக்கை எடுக்க அது வழி வகுக்கும் என்பதாகும். அதனால்தான் இருநாடுகளின் சம்மதம் இங்கு முக்கியமாகக் கருதப்படுகின்றது.

நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்கு கட்டுப்படுவதாக ஒரு நாடு பொதுவாக அல்லது முன்கூட்டியே சம்மதம் தெரிவிக்கலாம் அல்லது தகராறு ஒன்று தோன்றியவுடன் அத் தகராறுக்கு மட்டும் கட்டுப்படுவதாகச் சம்மதம் கொடுக்கலாம்,

அவ்வாறு அல்லாத சந்தர்ப்பங்களில் சர்வதேச நீதிமன்றம் பின்வருவன தொடர்பாக நியாயாதிக்கம் கொண்டது.

★ உடன்படிக்கைகளுக்குப் பொருள் கோடல் செய்வது

★ சர்வதேசச் சட்டம் தொடர்பான ஏதேனும் வினாவுக்கு பதில் அளிப்பது.

★ சர்வதேசக் கடப்பாட்டினை மீறுவதனால் எழுந்த நிகழ்வுகள் பற்றி ஆராய்வது.

**பிங்கலன்**

★ சர்வதேச கடப்பாடுகள் மீறப்படுவதனால் ஏற்படும் இழப்புகள் தொடர்பான நடவடிக்கை.

மேலும் சர்வதேச நீதிமன்றின் நியாயாதிக்கம் இரண்டு கூறுகளைக் கொண்டது

1. வாதப் பிரதி வாதங்கள் உள்ள வழக்குகளை (Contentious Cases) விசாரிக்கும் நியாயாதிக்கம்.

2. அறிவுரையாகத் தங்கள் எண்ணங்களையும் விளக்கங்களையும் வெளிப்படுத்தும் நியாயாதிக்கம் (Advisory Opinion)

பிணக்கு எழுந்தவுடன் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு விடுவதென நாடுகள் ஒப்புக்கொண்ட வழக்குகளும், வாதப்பிரதிவாதங்கள் உள்ள வழக்கு என்ற அடிப்படையில் நாடுகள் மனமுவந்து வைக்கும் வழக்காகக் கருதப்படும்.

ஆனால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சர்வதேச நீதிமன்றம் கட்டாயமான நியாயாதிக்கம் கொண்டது எனலாம்.

★ சர்வதேச நீதிமன்றின் தீர்ப்பிற்கு விட வேண்டியவை என நாடுகளுக்கிடையே இணக்கம் ஏற்பட்ட விடயங்கள்.

★ ஐ. நா. அமைப்பு சாசனத்திலும் அதனுடன் தொடர்புடைய சிறப்பு அமைப்புகளின் விதிகளிலும் கூறப்பட்டிருக்கும் வழக்குகள்.

★ விரும்பிய வாசகத்தின் படி [Optional Clause] ஒப்புக் கொள்ளப்பட்ட வழக்குகள்.

### நீதிமன்ற நடைமுறை

நீதிமன்றத்தின் அலுவலக மொழி ஆங்கிலமும், பிரெஞ்சும் ஆகும். நீதிமன்றத்தின் நடைமுறை இரண்டு வகைப்படும். ஒன்று எழுத்து மூலமானது. மற்றையது வாய் மூலமானது.

தனது தீர்ப்புக்கு விடப்பட்ட வழக்குகளை நீதிமன்றம் சர்வதேசச் சட்டத்திற்கு இணங்க முடிவு செய்யக் கடமைப்பட்டது. தனது தீர்ப்பின் போது சர்வதேச உடன்படிக்கைகள், சர்வதேச பழக்க வழக்கங்கள், நாகரீக நாடுகளினால் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கும் சட்டப் பொது விதிகள், நீதிமன்றத் தீர்ப்புகள், சர்வதேச சட்ட நிபுணர்களின் கருத்துக்கள் ஆகியவற்றை நீதிமன்றம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

நீதிமன்றத்தின் தீர்ப்புகள் அந்தந்த வழக்குகளுக்கு மட்டுமே பொருந்தும். ஒரு வழக்கின் கட்சிகளாக இருந்த நாடுகளை மட்டுமே அது கட்டுப்படுத்தும்.

### பாதுகாப்புச் சபைக்குச் செல்லலாம்

தீர்ப்புக்குக் கட்டுப்பட வேண்டிய நாடு அதற்குக் கட்டுப்பட மறுப்பின், தீர்ப்பை அமுல் நடத்த ஐ நா. பாதுகாப்புச் சபையின் உதவியை சர்வதேச நீதிமன்றமோ அல்லது சம்பந்தப்பட்ட நாடோ நாடலாம்.

சர்வதேச நீதிமன்றம் அண்மைக் காலம் வரை 70 வழக்குகளுக்கு மேல் விசாரித்துள்ளது அவற்றில் 40 வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கியுள்ளது

சர்வதேச நீதிமன்றின் தீர்ப்புக்குக் கட்டுப்படாத சம்பவம் ஒன்று, ஒரு முறையே நிகழ்ந்துள்ளது 1949 ஆம் ஆண்டு நடைபெற்ற கோர்பூ கால்வாய் வழக்கில் அல்பேனியா பிரிட்டனுக்கு 84 ஆயிரத்து 394 பவுணை நஷ்டஈடாகச் செலுத்தத் தவறியது.

சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதிகளாகத் தற்போது இலங்கையின் சார்பில் ஜீ. சி. வீரமந்திரியும் இந்தியாவின் சார்பில் ஜீ. எஸ். பதக்கும் பதவி வகிக்கின்றார்கள்.

### லிபியா தொடர்ந்துள்ள வழக்கு

அமெரிக்கப் பயணிகள் விமானம் ஒன்று 1988 ஆம் ஆண்டு குண்டுவைத்துத் தகர்த்தப்பட்டது தொடர்பாக லிபியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் எழுந்துள்ள சிக்கலை லிபியா சில தினங்களுக்கு முன்னர் சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கை சர்வதேச நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமா? அமெரிக்காவும், பிரிட்டனும் அதற்கான சம்மதத்தை வழங்குமா? —இதனை நாம் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இதே வேளை, இலங்கையில் அமைதிகாக்க என்று அனுப்பப்பட்ட இந்திய அமைதிப்படை தமிழ் மக்கள் மீது அடக்குமுறைகளைப் பாவித்து இம்சைப்படுத்தியதை பிரதான குற்றச்சாட்டாக முன் வைத்து—

'சர்வதேச கடப்பாட்டினைப் மீறியமை' என்ற வாசனத்தின் அடிப்படையில் இந்திய அரசுக்கெதிராக விடுதலைப் புலிகள் வழக்குத் தொடரக் கூடிய வாய்ப்புகள் உண்டு எனக் கூறலாம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வடிவேலு நடராசா

காரைநகர் களபூமியைச் சேர்ந்த வடிவேலு நடராசா நேற்றுக் காலமானார்.

இவர் சின்னத்தம்பி வடிவேலுவின் [முன்னாள் இ. போ. ச. நடத்துனர்] அன்பு மகனாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 10-00 மணிக்கு மூளாயில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மூளாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

மூளாய் மத்தி, மூளாய். — சி. வடிவேலு [தந்தை]

(சி-1590)

## திரு சின்னையா கதிரவேலு (இராசநாயகம்)

இளைப்பாறிய வனபரிபாலன உத்தியோகத்தர் சின்னையா கதிரவேலு காலமானார். இவர் காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும், திருமதி பத்மாவதி இராமநாதன், S.K மோகனதாஸ், காலஞ்சென்ற திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புத் தந்தையும், K. இராமநாதன் (இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), திருமதி பகவதி மோகனதாஸ் ஆகியோரின் மாமனாரும், வைத்திய கலாநிதி பொ. பரஞ்சோதி (யாழ். போதனா வைத்தியசாலை), மைதிலி, ரவிஷங்கர், உமா, சிற்சபேசன் (கனடா), சிவப்பிரியா, சிவஷங்கர் ஆகியோரின் அன்புப் பேரனும், ஆரணனின் பூட்டனுமாவார்.

அன்னாரது பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அவரது இல்லத்திலிருந்து (7A விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை) துண்டி மயானத்திற்கு இன்று (09-03-1992) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

K. இராமநாதன்.

7 A. விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை,

(20013)

## ஆறுமுகம் வியாளம்மா

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாக கொண்ட ஆறுமுகம் வியாளம்மா 08-03-92 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பவளம்மா, காலஞ்சென்ற பரமானந்தம் மற்றும் அருளானந்தம், தபானந்தம் ஆகியோரின் அருமை சகோதரியும், சச்சிதானந்தபிள்ளை [பனம் பொருள் அபிவிருத்திச்சபை], காலஞ்சென்ற சதானந்தசிவம், காலஞ்சென்ற நித்தியானந்தசிவம் மற்றும் ஏகானந்தசிவம் [வேலணை, பிரதேச சபை] ஆகியோரின் அன்புத் தாயாரும், சாட்சாயினி [ஆசிரியை சிறிய புஷ்ப மகளிர் கல்லூரி, கரம்பன்], மீராதேவி ஆகியோரின் அருமை மாமியும், சாரங்கன், சிந்து, கஜலக்ஷி ஆகியோரின் அருமை பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [09-03-92] காலை 10 மணியளவில் இல. 160, கோயில் வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்

தகவல்;

160, கோயில் வீதி. நல்லூர், யாழ்ப்பாணம். — மக்கள், மருமக்கள்.

[20016]

## மயில்வாகனம் தயாபரன் [தயா மாமா]

சரவணை மேற்கை பிறப்பிடமாகவும், கிளிநொச்சி நியூ சரவணாஸ் ரெக்ஸ்ரைல் முன்னாள் பங்காளரும், சுபா ரெக்ஸ் உரிமையாளரும் ஆகிய மயில்வாகனம் தயாபரன் 1-3-1992 இல் ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் மயில்வாகனம் திருமதி மயில்வாகனம் கனகாம்பிகை அவர்களின் கனிஷ்ட புதல்வனும், திரு. திருமதி முத்தையா [நீர்ப்பாசன இலாகா, கிளிநொச்சி] ஆகியோரது அன்பு மருமகனும், சுபாஷினியின் (மாலா) [ஜேர்மனி] அன்புக் கணவரும், பிரதீபா, பிரசாந்தி, உஷா, நிஷா [ஜேர்மனி] ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகேஸ்வரி, தவராசா [வர்த்தகர், ஏறாவூர்], சந்தசாமி [அதிபர், கரம்பொன் சிவகுருநாத வித்தியாசாலை], தர்மராசா [வர்த்தகர், கரம்பொன்] ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. பொ. நாகராசா, திருமதித தவராசா, திருமதி செல்வநாயகி கந்தசாமி [இளைப்பாறிய ஆசிரியை, நடராசா வித்தியாசாலை, வேலணை], திருமதி புஷ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், லோகேஸ்வரன் [ஜேர்மனி], ஸ்ரீரஞ்சனி [ஜேர்மனி], இராசேஸ்வரன் [ஜேர்மனி], ஜெகதீஸ்வரன் [கண்ணன்] ஆகியோரின் அன்பு மாமனாரும், தவேந்திரி, தவேந்திரன், தவக்குமாரி, கலைச்செல்வி [யாழ். பல்கலைக்கழக மாணவி, கலைப்பீடம்], நிரஞ்சன், நிமலன் ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்,

தகவல்;

பொற்பதிறோட், கொக்குவில். (20015) — பொ நாகராசா [மைத்துனர்], ம. கந்தசாமி [சகோதரன்]

## தேசிய .

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

றெடுக்க வேண்டும் என்பதற்காகவும், ஆண்களுக்கு நிகராக மதிப்புடனும், பெருமையுடனும் வாழ வேண்டும் என்பதற்காகவும், போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

### தடையான சக்திகள்

காலங்காலமாக பெண்களை ஒடுக்கி வரும் ஆணாதிக்க சக்திகளும் அந்த சக்திகளுக்கு அடங்கிப் போவதையே மரபு எனவும், பண்பாடு எனவும் கொண்டொழுகும் பெண்களின் அறியாமையும் தான் பெண் விடுதலைக்கு - பெண் உரிமைக்கு, பெரும் தடையாக உள்ள சக்திகளாகும்.

இன்று பெண்ணுரிமைக்காக, பெண் விடுதலைக்காக போராடப் புறப்பட்டிருப்பவர்கள் முதலில், அறியாமையிலும் மூடத்தனத்திலும் மூழ்கி இருக்கும் பெண்களை, அவற்றிலிருந்து விடுவிக்கின்ற வகையிலே வேலைத் திட்டங்களை அமைத்துச் செயற்படுத்த வேண்டும்.

தமது தாய்மண்ணை மீட்க, தேசிய விடுதலையை வென்றெடுக்க, ஆயுதம் ஏந்தி, இன்று பல்லாயிரக்கணக்கான தமிழீழப் பெண்கள் களத்தில் குதித்துள்ளார்கள்.

### பெண்களின் பங்களிப்பு

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ''அச்சம் தான் பெண்களுக்கு அணிகலன்! வீரம் ஆண்களின் தனிச் சொத்து'' என்றிருந்த நிலையை—மரபை உடைத்தெறிந்துவிட்டு ஆண்களுக்கு நிகராக ஏன் ஆண்களையே விஞ்சுகின்ற அளவுக்கு, களத்திலே தமது வீரத்தைப் பெண்கள் வெளிப்படுத்தி வருகிறார்கள். தமிழீழ மண்மீட்புப் போரிலே, தமிழீழ இளம் பெண்களின், திரளான பங்களிப்பானது, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உருக்கைப் போன்ற உறுதியை அளித்துள்ளது.

உலகமே வியக்கும்வகையில், ஆற்றல் படைத்த வீரம் படைந்த எமது பெண்கள் அணியினர், இருளில் மூழ்கி இருக்கும் பெண்களை விழிப்புறச் செய்து, அவர்களை தட்டி எழுப்பி அணி திரட்டினால், பெண் ஒடுக்குமுறை சக்திகளும் ஆணாதிக்க சக்திகளும் தமிழீழத்தில் எளிதில் அழித்தொழிக்கப்பட்டுவிடும்.

தேசிய விடுதலையுடன், பெண் விடுதலையையும் வென்றெடுப்பதன் மூலமே, எதிர்காலத்தில் இரண்டையும் ஒன்றாகப் பெறமுடியும்

இன்று தேசிய விடுதலைப் போராட்டத்தில் எழுச்சியுடன் குதித்துள்ள பெண்கள்—தேசிய விடுதலையைப் பெற்ற பின், தமிழீழத்தில் மீண்டும் ஒரு முறை பெண் ஒடுக்கு முறைக்கு எதிராக போராடுகின்ற நிலை ஏற்படக்கூடாது.

அதற்காகவே எமது தலைவர், தேசிய விடுதலைப் போராட்டத்துடன், பெண்களின் விடுதலையையும் ஒன்றிணைத்து, பெண் ஒடுக்குமுறை இல்லாத— பெண் ஆண் சமத்துவம் கொண்ட — சாதி வேறுபாடு களையப்பட்ட புரட்சிகர சமூக அமைப்பு ஒன்றைப் படைப்பதற்கான - முழு விடுதலைக்கான களம் அமைத்திருக்கிறார்.

எமது தலைவரின் உயரிய இலட்சியத்தின் அடிப்படையிலே, வேணவாவின் அடிப்படையிலே இந்த மாநாட்டை நடத்திக்கொண்டிருக்கிறீர்கள். வெறுமனே மாநாட்டை நடத்தி, திட்டங்கள் தீட்டி, தீர்மானங்கள் போடுவதால் மட்டும் ஒன்றும் விளைந்து விடப் போவதில்லை.

தீட்டப்படுகின்ற திட்டங்களை முழுமையாக — முறையாக — நடைமுறைப்படுத்துவதன் மூலம் தான் மாநாடு கூட்டப்பட்டதன் — முழுமையான பயனைப் பெறமுடியும் — என்றும் தெரிவித்தார்.

[அ-76]

## வருடப்பிறப்புக்கு முன்னர் கிளிநொச்சிக்கு மின்சாரம்

வருடப்பிறப்புக்கு முன்னர் கிளிநொச்சிக்கு மின் விநியோகம் கிடைக்கும்.

இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் திரு. வி. கந்தசாமி இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு மின்சாரம் வழங்குவதற்குத் தேவையான மின் இணைப்பு திருத்த வேலைகள் பூர்த்தியாகியுள்ளன.

கொழும்பில் இருந்து 'டிரான்ஸ்போமர் ஒயில்' மற்றும் உபகரணங்கள் எடுத்து வரப்படவேண்டியுள்ளன. வவுனியாவில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்ததால் இவற்றை எடுத்து வருவது தாமதமாகியது. இப்போது ஊரடங்கு நீக்கப்பட்டுவிட்டதால் அனேகமாக அடுத்த வாரத்தில் அவை கிளிநொச்சி வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

[உ-3]

## சைக்கிள் குண்டு வெடித்து படையினர் மூவர் காயம்!

### கல்முனையில் சனியன்று சம்பவம்

கொழும்பு, மார்ச் 9

கல்முனை நற்பிட்டிமுனைச் சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் [சனிக்கிழமை] சைக்கிள் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த நேரக் கணிப்புக் குண்டு [ரைம் பொம்] ஒன்று வெடித்ததில், விசேட பொலீஸ் அதிரடிப் படையைச் சேர்ந்த மூவரும் பொது மகன் ஒருவரும் காயமடைந்தனர்.

காயமடைந்த படையினரில் இருவர் இன்ஸ்பெக்டர், உதவி இன்ஸ்பெக்டர் தரங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தைப் பகுதியில் சைக்கிள் ஒன்று அநாதரவாகக் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து. விசேட பொலீஸ் அதிரடிப் படையினர் அப்பகுதியில் இருந்து மக்களை வெளியேற்றிக் கொண்டிருக்கையில், அந்த ''ரைம் பொம்'' வெடித்ததாகக் கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்தது.

[ஒ-எ-10]

## ஆயுதம் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 9

கட்டைக்காட்டுப் பகுதியில் தடைகளை அகற்றும் பணியில் நேற்று ஈடுபட்ட விடுதலைப் புலிகள் மேலும் ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்கள் சிலவற்றைக் கைப்பற்றினர்.

[ஒ-3]

## காங்கேசனுக்கு இன்று வாகன அணி

யாழ்ப்பாணம், மார்ச் 9

காங்கேசன்துறையில் இருந்து உணவுப் பொருள்களை எடுத்துவர எட்டு லொறிகள் கொண்ட வாகன அணி ஒன்று இன்று காலை 7 மணிக்கு யாழ். நகரில் இருந்து புறப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சி வெற்றியளித்ததையடுத்தே இன்று மற்றொரு வாகன அணி அங்கு செல்கிறது

[[ஒ-3]]

## இறக்குமதி வரி அதிகரிக்கும்

அதிகரித்து வரும் இராணுவச் செலவைச் சமாளிப்பதற்காக ஸ்ரீலங்கா அரசு இறக்குமதித் தீர்வையை அதிகரிப்பது பற்றி ஆலோசித்து வருவதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

## தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம். மார்ச் 9

பருத்தித்துறை துறைமுகத்துக்கு நேற்று வந்து சேர்ந்த 'லில்லி' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் நேற்றே ஆரம்பமாகின.

தபால் பொதிகள் இன்று இறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[ஒ-3]

## கோண்டாவிலில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு வீச்சினால் வீடுகளில் இருந்த உடைமைகள் பல நாசமாகின. பயன்தரு மரங்கள் சிலவும் முறிந்து வீழ்ந்தன.

வீதியால் சென்றுகொண்டிருந்த கோப்பாய் தெற்கைச் சேர்ந்த இளையதம்பி அமுதலிங்கம் (28 வயது). உரும்பராய் செல்வபுரத்தைச்சேர்ந்த மாணிக்கம் இரத்தினம் (4 வயது) ஆகியோரே காயமடைந்தனர்.

இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ஒ-5-15-143-154-131)

## புலிகளின்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கப்பலாமையே இதற்குக்காரணம் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனாலேயே அவர்களுக்கு மீள் பயிற்சி வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது.

அவசரமாக படையணிகளைத் திரட்டுவதற்காக புதிய படையினருக்கு பயிற்சி அளிக்கும் கால எல்லை ஆறு வாரங்களாகக் குறைக்கப்பட்டதும் சுட்டிக்காட்டப்பட்டது.

(உ-எ)

## குடாநாட்டில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லூரியில் ஓவியக் கண்காட்சியும் இடம்பெற்றன.

அல்வாய் சின்னத்தம்பி மகா வித்தியாலயத்தில் பனம் பொருள்கண்காட்சியை யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் நேற்றுக் காலை திறந்து வைத்தார்.

[உ-3]

## நாளை ..

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட 47 அணிகள் நாளைய இறுதிப் போட்டியில் பங்குபற்றுகின்றன. இந்த அணிகளில் மொத்தம் ஆயிரத்து 500 மாணவர்கள் பங்குபற்றுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஷெல் வெடித்த..

[ 1ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்ன நடக்கிறது போன்ற விவரங்களை பிரதமர், அருகில் இருந்த அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டதாகவும்—

''இந்தளவு பெரிய சத்தமா?'' என்று பிரதமர் பெரும் ஆச்சரியத்துடன் வினாவியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் வவுனியா வந்திருந்த அன்று சாஸ்திரிகூழாங்குளம் பகுதியில் படையினர் ஷெல் வீச்சுத் தாக்குதல்களை நடத்தியதாகக் கூறப்பட்டது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 9 3-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org